IN THE COURT OF SUBORDINATE JUDGE, ERANIEL.
O.S. No.11/2024
Deposition of Witness for PW1.

Name : திருமதி. ஜெனிலா
Father Name :
Age :
Calling :
Village :
Taluk :
District :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 17.11.2025.

<u>சத்தியபிரமாணத்தின் பேரில் சாட்சியமளிக்கிறார்.</u>

<u>முதல் விசாரணை</u>

நான் இவ்வழக்கில் 1ம் வாதி. எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ளது என்னுடைய கையெழுத்து தான். அதில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளை நான் தான் வழக்கறிஞருக்கு கூறினேன். 28.01.1976 தேதியிட்ட எனது அம்மாவின் கிரைய ஆவணம் அசல் வா.சா.ஆ–1, 14.10.1991 தேதியிட்ட எனது அம்மாவின் பெயரில் உள்ள கிரைய ஆவணம் அசல் வா.சா.ஆ–2, 14.10.1991 தேதியிட்ட எனது அம்மா மரிய புஷ்பம் பெயரில் உள்ள மற்றொரு கிரைய ஆவணம் அசல் வா.சா.ஆ.3, ( 3 மற்றும் 3ம் பக்கங்கள் கிழிந்த நிலையில் உள்ளன) 13.04.1989 தேதியிட்ட எனது தாயார் பெயரில் உள்ள கிரைய ஆவணம் அசல் வா.சா.ஆ–4, 21.04.2008 தேதியிட்ட எனது தாயாரின் இறப்பு சான்றிதழ் சான்றிட்ட நகல் வா.சா.ஆ–5, 14.11.2003 தேதியிட்ட எனது தகப்பனார் ஏசுமரியானின் இறப்பு சான்றிதழ் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.6. வழக்கு பட்டிகை சொத்தின் வழிகாட்டி மதிப்பு பட்டியல் பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ–7, எனது ஆதார் அடையாள அட்டை ஒளிநகல் வா.சா.ஆ–8 ( அசலுடன் ஒப்புமைப்படுத்தி பார்க்கப்பட்டது) 2ம் வாதி/ எனது உடன்பிறந்த தம்பி சுரேஷ்சின் ஆதார் அடையாள அட்டை ஒளிநகல் வா.சா.ஆ–9 ( அசலுடன் ஒப்புமைப்படுத்தி பார்க்கப்பட்டது). வழக்கு படி தீர்ப்பாக வேண்டும் என்று வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.